தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கிழமை இதழ்)

தொகுதி-3] திருவள்ளுவர் ஆண்டு 2016 கன்னி 6 (29-[illegible]-1985) 65 காசுகள் [இதழ் எண்: 64] [பகுதி 34-35

தமிழீழக் கோரிக்கையைப் பின்வாங்கச் செய்வதே இராசீவ் காந்தியின் நோக்கம்!

அதற்கான சூதாட்டமே இணக்கப் பேச்சு!

ம. கோ. இராமச்சந்திரன் அதில் ஒரு பகடைக்காய்!

ஈழப்போராளிகள் ஏமாறவேண்டாம்! உங்களின் பின்வாங்கல் தமிழினத்தையே வேரறுக்கக் கூடும்! எச்சரிக்கை!

தமிழ்நாட்டுக் கோரிக்கையே தமிழீழத் தீர்வை உறுதிப்படுத்தவல்லது!

இந்திய அரசு இலங்கைத் தமிழினப் படுகொலைக்கு இதுவரை கண்டனம் தெரிவிக்கவில்லை!

கவலை தெரிவிப்பது கண்டனம் ஆகாது!

பாவலரேறுவின் தெளிவான் முன்னேட்டம்!

இந்தியத் தலைமை யமைச்சர் இராசீவ் காந்தி இலங்கைப் போராளிகளுடன், புதுதில்லியில் ஒன்றரை மணி நேரம் பேசியுள்ளார். திம்புப் பேச்சின் தொடர்ச்சியாக மூன்றாவது முறை நடக்கும் பேச்சுரை இது. ஒன்றரை மணிநேரம் நடந்த இப் பேச்சில் இராசீவ் காந்தி, ஈழப் போராளிகள் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்ததாகச் செய்திகள் வந்துள்ளனவே தவிர, அவற்றுக்கு விடையாகவோ, தம் கருத்தாகவோ ஒன்றும் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

முன்னர் ஏற்பட்ட கலவர நிறுத்தம், இலங்கை அரசால் பலமுறை அஃதாவது ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து நாள்தோறும் மீறப்பட்டு வந்ததுபற்றியும், பல நூற்றுக் கணக்காக ஒன்றுமறியாத தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டும்; கொளுத்தப்பட்டும் வந்தது இராசீவுக்கு நன்றாகத் தெரியும். போராளிகள் தங்கள் வன்முறையை நிறுத்தவில்லை என்று கூறிக்கொண்டே சிங்கள வெறியர்களும் படைத்துறையும் இந்த அத்து மீறல்களை நடத்தியிருக்கின்றனர். இதுபற்றி இராசீவ் காந்தி தம் கேரளச் சுற்றுச் செலவின்பொழுது கவலை தெரிவிப்பதாகச் சொன்னாரே தவிர, ஒரு சொல்லும் அதைக் கண்டித்துச் சொல்லவில்லை என்பதை நாடு அறியும். கவலை தெரிவிப்பது வேறு; கண்டனம் தெரிவிப்பது வேறு! அதுவும் இந்தக் கவலையைத் தாமும் பகிர்ந்து கொள்வதாக செயவர்த்தனன் தெரிவித்துள்ளது. அவர் கவலையைப் பகடி (கேலி) செய்வதாகவே உள்ளது. திம்புப் பேச்சு தொடங்கிய மூன்று மாதங்களாக, இலங்கை நாளுக்குநாள் அதன் கொன்று குவிப்புகளை மிகுதிப் படுத்தியே வந்துள்ளதே அன்றி, ஒரு நாளையும் வெறு நாளாக விடவில்லை. இந்த நிலையிலும் கூட இராசீவ் காந்தி வாய் மூடி ஊமையாகவே இருந்து வந்தது, அவருக்குத் தமிழினம் எவ்வாறேனும் ஒடுக்கப்படவேண்டும், வலிவிழக்க வேண்டும் என்ற எண்ணமிருப்பதையே உறுதிப் படுத்துகிறது.

இலங்கையில் தமிழினம் ஒரு நாடு பெறுவதை இந்தியா விரும்பவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த நிலையிலும் இணக்கப் பேச்சு என்னும் சூதாட்டத்தை இந்திய அரசு வலுக்கட்டாயமாக மேற்கொண்டு வருகிறது. தமிழ் மக்கள் அழிய அழிய, போராளிகள் தம் தமிழீழக் கோரிக்கையில் இறங்கி வருவார்கள் என்பதும், அக்கோரிக்கையைப் பின்வாங்கச்செய்ய வேண்டும் என்பதுமே இராசீவின் நோக்கம் என்பதை அவர் நடவடிக்கைகள் காட்டுகின்றன. அதற்கான நாடகத்தையே இணக்கப் பேச்சு என்னும் திரையுடன் இந்தியா நடத்தி வருகிறது. இந்த நாடகச் சூதாட்டத்தில் சகுனியாகவும் பகடைக் காயாகவும் தமிழக முதல்வர் ம. கோ. இராமச்சந்திரன் பயன்படுத்தப்பட்டு வருகிறார். தமிழினம் உரிமை பெறுவதில் இராசீவைப் போல இராமச்சந்திரனுக்கும் விருப்பமில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்த நிலையில் தமிழீழப் போராளிகள் மிக விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் அமைவுடனும் (நிதானத்துடனும்) நடந்துகொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறோம். அவர்கள் தமிழீழக் கோரிக்கையிலிருந்து ஓர் இம்மியும் பின்வாங்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கவேண்டும். அவர்களின் பின்வாங்குதலோ, நெகிழ்ச்சியோ தமிழினத்தை அடியோடு வேரறுத்துவிடும் என்பதை மறந்துவிட வேண்டாம்.

மேலும் தமிழீழப் போராட்டத்தில் இந்தியாவைப் பணிய வைப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அஃது, இலங்கைத் தமிழர் தமிழீழத்திற்காகப் போராடும் இதே வேளையில், தமிழ் நாட்டிலும், தனித் தமிழ் நாட்டு விடுதலைக் கோரிக்கை எழுப்பப்பட வேண்டும். இன எழுச்சி முறையிலும் சரி, போர்த் தந்திர முறையிலும் சரி. இதுவே சரியான திட்டமாக இருக்கமுடியும்.

இந்த இடத்தில், இன்னொன்றையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

தமிழீழப் போராளிகளுக்குத் தமிழீழக் கோரிக்கைதான் முகாமையானது; தேவையானது. இந்தியாவில் தமிழ்த் தேசிய இனச்சிக்கலை எழுப்புவதோ, தனித் தமிழ்நாடு அமைவதோ அவர்களுக்கு முகாமையானதாகவோ தேவையானதாகவோ படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். உலகத் தமிழினம் தன்னை நிலைநிறுத்திகொள்ளவும் ஈடேற்றிகொள்ளவும் வேண்டுமானால் இந்த நூற்றாண்டுக்குள், அஃதுஒரு தனிநாட்டை பெற்றுக்கொள்ளவேண்டும். அடுத்த நூற்றாண்டு ஒரு மின்னணு அறிவியல் நூற்றாண்டாகத் தொடங்கும் ஆகையால் அக்கால் மக்கள் உரிமைகள் வலுப்பெற வாய்ப்பில்லை என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மேலும், இன்றுள்ள நிலையில், தமிழ்நாட்டுக் கோரிக்கையே, தமிழீழக் கோரிக்கையைவிட முகாமையானதாக நமக்குப் படுகிறது. அதுவே தமிழீழத்தையும் கூட மீட்டெடுக்க வல்லது. இலங்கையில் தமிழினத்தை அதன் சிறுபான்மை நோக்கி ஒரு தேசிய இனம் என்றுகூட ஒப்புக்கொள்ளாத நிலையில், தமிழ்நாடு அமைவது எவ்வளவு இன்றியமையாதது என்பதை இங்குள்ளவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். நமக்கென்று ஒரு வீடு கேட்கும் உரிமை இருக்க, அதன் இறவாணத்தில் நிற்க இடம் கேட்டோ, அல்லது இன்னொரு வீட்டில் உள்ள திண்ணையில் படுக்க இடம் கேட்டோ நாம் ஏன் போராடிக் கொண்டிருக்க வேண்டும்? எண்ணிப் பார்க்கவும்.

— பெருஞ்சித்திரனார்.

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்

தொடர்—16

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு!

4. பாரிசு நிகழ்ச்சிகள் (தொடர்ச்சி)

அன்பரின் மறுப்பு மடலுக்கு விளக்கம்: இத் தொடரில் கூறப்பெற்று வரும் பொதுவாக பண்பாட்டியல் கருத்துகளுக்கும், சிறப்பான பெண் — ஆண் உரிமையியல், பாலியல் கோட்பாட்டு விளக்கங்களுக்கும், பல்வேறு எதிர்நிலையான கருத்துகள் தோன்றுவது இயல்பே.

நீண்ட நெடுநாள்களாகவே தொடர்ந்து இருந்து வந்து, குழகாய நிலையில் ஊறிப்போய், வாழ்வியலாகவே மாறிப் போய்விட்ட ஒரு மனநிலையில் உள்ள சிக்கல் சிணுக்குகளை அவிழ்க்கின்றபோது சில நாலிழைகள் அறுந்து போகவேண்டியிருப்பதும், அதற்காகச் சிலர் வருந்துவதும், எதிர்ப்புத் தெரிவிப்பதும் இயங்கியலின் கோட்பாட்டுக்குள் அடங்கும் நிகழ்வுகள்தாம். இந்நிலைகள் சிந்தனைகளைத் தெளிவாக்க உதவுகின்றன. சிந்திக்கவே மறுத்த போக்கினின்று, சிந்திக்க வேண்டிய கட்டாயத்துக்குள் குழகாயம் கொண்டுவரப்பெறும் பொழுது, இத்தகைய எதிர்நிலைச் சிந்தனைகளையும் நாமே வரவேற்றாகவேண்டும். எனவே இங்குக் கூறப்பெற்ற கருத்துகளை நாம் ஒருவாறு விளக்கிவிட்டு மேலே செல்லுவோம். இவ்வகையில் நாம் எடுத்துக் கொண்ட, குறிப்பிட்ட கட்டுரைத் தொடர் நீளுவதைப் பற்றியோ, சிறிது திசை திரும்புவதைப் பற்றியோ நாம் கவலைப்படக் கூடாது. சொல்லவந்த கருத்துகள் ஒரு சிறிது தேக்கமுற்று நின்று, மேலும் சில கருத்துகளுக்கும் சிந்தனைகளுக்கும் நம்மை அழைத்துச் செல்லுமானால், நாம் அந்த நிலையை வரவேற்கவே வேண்டும்; தவிர்க்க வேண்டியதில்லை. அதனால், வெளிநாட்டுக் காட்சிகளையும் செயற்பாடுகளையும் விரைந்து காண வேண்டும் கேட்க வேண்டும் என்று ஆர்வமுடையவர்கள், அக்காட்சிகளுக்கும், செயல்களுக்கும் முன்னர்சில விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே நோக்கம். எனவே, அவர்கள் பொறுமையுடனும் அமைவுடனும் இங்குக் கூறப்பெறும் கருத்து விளக்கங்களைச் செவி மடுப்பார்களாக.

இங்கு, மடலை எழுதித் தம் கருத்தைத் தெரிவித்த ஓர் அன்பு அறிஞர் நம் அன்புக்கும் மதிப்பிற்கும் உகந்த பெரும் புலவர். பண்பும் ஒழுக்கமும் பாடாண்மையும் துலங்கத் தோன்றிய சான்றோர். நட்பும் நயன்மையும் வாய்ந்த நல்லவர். கழக இலக்கியங்களிலேயே உள்ளத்தைத் தோய விடும் தமிழறிஞர்; அவரின் தகைமையும், வாய்மையும் கருதியே, அவர் மடலை வெளியிடவும் அதற்கு விடை கூறவும் நாம் முன்வந்தோம்.

முதற்கண், அவர் மடலின் முந்தைய பத்தியில் குறிப்பிடும் கருத்து ஒன்றினை விளக்கமாகப் பார்ப்போம்.

'ஆனால், அச் சிந்தனை மேனாட்டு முறைக்கும் பண்பாட்டுக்கும், வளர்ந்து வரும் மாந்தவியல் மனவளர்ச்சிக்கும் நமது முந்தைய இக் கருத்துப் பொருந்தாது என்று எம்போல்வார் உணருமாறு அமைந்துள்ளது' என்பது அவர் கருத்து.

இதில், அவர் பண்பாட்டு அடிப்படையில் மேனாட்டையும் நம் நாட்டையும் வேறாகப் பிரிக்கப் பார்ப்பது அனைவரும் பார்க்கக் கூடிய, கூறக்கூடிய பொதுவான கருத்தே. ஆனால் நில அளவாகப் பார்க்கையில் மேனாடும் நம் நாடும் வேறுவேறு தன்மைகள் கொண்டனவே. எனினும் மாந்தவியல் படி பார்க்கும் பொதுவியலில், அங்குள்ளவர்களும் நாமும் வேறுவேறு தன்மையினர் என்று கூறுவதில், நாம் கொஞ்சம் அமைவு கொள்ளுதல் வேண்டும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பொது மாந்தத் தன்மைக்கு வித்தூன்றிய நாம், மாந்தரை வேறுவேறாகப் பார்ப்பது எவ்வகையில் சரியாக இருக்க முடியும். மேனாட்டாரும் நாமும், உணவு முறையில், உடை வகையில், வாழ்வியல் நடைமுறைகளில் அவரவர் நாட்டுத் தட்பவெப்பக் கூறுகளுக்கேற்ற முறையில், பல்வேறு வகைகளில் வேறுபட்டிருக்கலாம். ஆனால் அவரவர் கொண்டிருக்கும் மனவுணர்வுகளிலும், அறிவுணர்வுகளிலும் வேறு வேறு வகையான உயிரினங்களைச் சார்ந்தவர்கள் என்று கூறுவதோ, அவர்கள் கொண்ட மனவுணர்வுகள், அறிவுணர்வுகள் தாழ்ந்தவை என்றும், நாம் கொண்டவை உயர்ந்தவை என்றும் கருதுவதோ எவ்வகையில் சரியாக இருக்க முடியும்? நம் மனவுணர்வுகளையும் அறிவுணர்வுகளையும் மிகத் தாழ்ந்தவை என்று நாம் கூறுவது போலவே, அவர்களும் கூறலாம் அன்றோ? இவற்றுள் எவை சரி என்று எவர் தீர்மானிப்பது? எவற்றை அளவு கோல்களாகக் கொண்டு எடையிடுவது? எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம் நாட்டிலேயே, மாவட்டத்துக்கு மாவட்டம் இடத்துக்கு இடம், வீட்டுக்கு வீடு, உணவு முறைகளிலும், உடைமுறைகளிலும், பழக்க வழக்க முறைகளிலும் நாம் வேறுபட்டிருக்க வில்லையா? வடநாட்டார் உணவு, உடை, பழக்க வழக்கம் வேறு. தென்னாட்டார் உணவு, உடை, பழக்க வழக்கம் வேறாக இல்லையா? அவர்கள் கோதுமையை உண்கின்றனர்; நாம் அரிசியை உண்கிறோம்; அவர்கள் நம்மினும் குளிர்நிறைந்த பகுதிகளில் வாழ்வதால், உடைகளிலும் நம்மினின்று வேறுபட்டிருக்க வில்லையா? அவ்வளவு ஏன்? தென்னாட்டிலேயே தென்பகுதியினர் உணர்வும், உடையும், நடைமுறைகளும் வடபகுதியினர் உணவு உடை, நடைமுறைகளுக்குக் கூட, மாறுபட்டிருக்க வில்லையா? இன்னும், இங்குள்ளவர் மதத்திற்கு மதம், சாதிக்குச் சாதி, குலத்துக்குக் குலம், உணவு, உடை, ஒழுகு முறைகள் இவற்றுலெல்லாம் மாறுபாடாகத்தானே இருக்கிறோம். மரக்கறி உணவுண்ணும் சைவமதக் கொள்கையுடையவர், ஊன் உண்பாரைத் தாழ்வாகத் தானே கருதுகின்றனர். ஊன் உண்பாரிலும் ஆடு, கோழி உண்பவர்கள் மாடு, பன்றி உண்பவர்களைத் தாழ்வாகத்தானே மதிக்கின்றனர். அரிசி உணவு உண்பவர்கள், கம்பு, கேழ்வரகு போலும், கருந்தவச உணவு உண்பவர்களைக் கீழாக மதிக்க வில்லையா? பால் குடிப்பவர் பழஞ்சோற்று நீர் உண்பவரைத் தாழ நினைக்க வில்லையா? இப்படி, மதத்துக்கு மதம் சாதிக்குச் சாதி உணவிலும், உடையிலும், கூட நாம் ஏற்றத் தாழ்வுகளைத்தாமே கற்பித்துக் கொண்டு, அக்கற்பிதமே சரி என்று கருதிக் கொண்டு தானே கிடக்கிறோம்.

இன்னும், அக்காள் மகளை மணந்து கொள்பவர்கள், சிற்றப்பன் மகளை மணவாததும், சிற்றப்பன் மகளை மணப்பவர்கள் அக்காள் மகளை மணவாமல் மறுப்பதும், மதங்களால் வேறுபட்டிருக்கவில்லையா? ஒரு மனைவியுடன் வாழ்வதும், பல மனைவியரை ஒப்புவதும், ஒரு கணவனுடன் வாழ்வதும், கணவர் பலரை மணப்பதும், மதங்களாலும் குலங்களாலும், சாதிகளாலும் வேறுபட்டிருக்க வில்லையா? இவையெல்லாம் கீழை நாடு என்றும், புண்ணிய நிலம் என்றும் கருதப்படும் நம் நாட்டிலும் இருக்கத் தானே செய்கின்றன! இவற்றுலெல்லாம் ஓரினம் தாழ்ந்தது, உயர்ந்தது என்று கருதிவிட முடியுமா? அப்படிக் கருதுவதுதான் அறிவுடைமை என்று ஏற்றுக் கொள்ள முடியுமா? 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்; சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்று பொதுமை அறம்பாடிய நாம் தாமே பிறப்பாலும், செய்தொழிலாலும், நிறத்தாலும், இனி, அவற்றிலும் மாறுபடக்கூடிய, உணவு, உடை முறைகளாலும், வாழ்வியல் நடைமுறைகளாலும், பண்பாடு, ஒழுக்கம் என்னும் அடிப்படையில் தாழ்ச்சி உயர்ச்சி கருதி வருகிறோம்.

மேனாட்டாரை அவர் பண்பாடு, வாழ்வொழுங்கு இவற்றில் தாழ்ந்தவர்கள் என்று நாம் கருதுகிற அதே பொழுதில், நாமெல்லாரும் அவற்றில் அவர்களைவிடத் தாழ்ந்தவர்கள், முன்னேறாதவர்கள், பிற்போக்காளர்கள், பழைமை விரும்பிகள், காட்டு விலங்காண்டிகள் என்று அவர்கள் கருதுவதும் இயல்புதானே! ஒருவகையில் சரியுந்தானே!

அப்படித்தான் நாம் பண்பாட்டில், மனவியல் வளர்ச்சியில் என்ன உயர்வான கோட்பாடுகளைக் கொண்டிருக்கின்றோம்? மனத்தால், பண்பாட்டால் நாம் உயர்ந்தவர்கள் என்றால், நம்மிடம் உலகில் உள்ள எல்லா இனங்களையும் விட வாழ்வியல் பூசல்கள் மிகுந்திருக்குமா? பிறப்பினாலும், நிறத்தாலும், உணவு, உடை, பழக்க வழக்கத்தாலும் நம்மில் ஒருவரை ஒருவர் தாழ்த்தியும் உயர்த்தியும், விலக்கியும், அடிமைப்படுத்தியும், கீழ்மைப்படுத்தியும், உரிமை தவிர்த்தும் இருக்கின்ற தன்மைகளா பண்பட்ட, உயர்மனப் பாங்குள்ள ஓர் இனத்தின் கோட்பாடுகளாக இருக்க முடியும்?

நம்மில் ஒரு திருவள்ளுவர், ஒரு கண்ணகி, ஓர் இராமலிங்கர், ஒரு விவேகானந்தர், ஒரு புத்தர் தோன்றிவிட்டாலே நாம் அனைவரும் திருவள்ளுவர் என்றோ, இராமலிங்கர், விவேகானந்தர், புத்தர் போன்றவர்கள் என்றோ கூறிக்கொள்ள முடியுமா? இனி, அவர்கள் கொள்கைகளைத்தாம் உயர்வானவை என்று சொல்லி, அவற்றையே நாம் இவ்வுலக மக்கள் அனைவரும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்றே வலியுறுத்திவிட முடியுமா? இப்படியொரு தவறான மனப்போக்கு நம் நாட்டினர்க்குத் தொன்று தொட்டு இருந்து வருவதை நாம் மறைத்துக் கொள்ள முடியாது.

ஓர் இனம் முன்னேறியது என்று சொல்ல வேண்டுமானால், அதில் உள்ள பெரும்பாலாரும் முன்னேறியாக வேண்டும். ஒவ்வொரு தனிமாந்த முன்னேற்றமே இன முன்னேற்றம் ஆகுமேயன்றி, ஓரிருவர், அதுவும் ஒருசில கால எல்லையில் முன்னேறி விடுவதாலேயே அவ்வினம் முன்னேறிவிட்டது என்று சொல்லிவிட முடியாது. பெருமைப் பட்டுக் கொள்ள முடியாது! இந்தியாவில் பலகோடிச் செல்வர் சிலர் இருக்கிறார்கள் என்பதால், இது வறுமை நாடு இல்லை என்றோ, செல்வ நாடு என்றோ சொல்ல முடியுமா? இந்த மதிப்பீடு பொருளியலுக்கு மட்டுமன்று: வாழ்வியலின் அனைத்துக் கூறுகளுக்குமே பொருந்தும்.

எனவே, மாந்த நிலையில், உலகில் எந்த இடத்திலும், எந்தக் காலத்திலும் உள்ள, எந்த இனத்திலும், ஒரு தனி மாந்தனின் மனச் செழுமையும், மனவொழுக்கமும், படிநிலை வளர்ச்சியுமே அந்த இனம் முழுமைக்கும் உள்ள தனிச் சிறப்பாகி விடாது; நம் நாட்டில் எப்படி உயர்ந்த நல்லொழுக்கமும், தனிநிலைப் பண்பும், தனிநிலை வளர்ச்சியும் பெற்றவர்கள் உள்ளார்களோ, அவர்களைப் போல், மேனாடுகளிலும் சரி, பிற கீழை நாடுகளிலும் சரி, அப்படிப்பட்டவர்கள் இருக்கவே செய்கிறார்கள். மேனாடுகளில் பிறந்துவிட்ட, அல்லது வாழ்கின்ற காரணத்தாலேயே ஒட்டுமொத்தமாக, அங்கு உள்ளவர்கள் அனைவருமே தனி ஒழுக்கமில்லாதவர்கள், பண்பற்றவர்கள், விலங்குகள் போன்றவர்கள் என்று கருதிக் கொள்ளக்கூடாது. இஃதோர் ஒருசார்பு மனப்பான்மை. உலகெங்கணும் உள்ள மாந்த இனத்தின் உயர்வு தாழ்வுகளை, நம் நாட்டில் உள்ளவர்கள் அல்லது நாம் மட்டுமே வரையறுத்துவிட முடியாது. எனவே, முதலில், நாம், மேலை நாடுகள் அனைத்தையுமே, அல்லது அங்குள்ளவர்கள் அனைவரையுமே பண்பாடற்றவர்கள், ஒழுக்கமற்றவர்கள் என்று கருதும் தவறான மனப்பான்மையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஒழுக்கம், என்பதும், பண்பாடு என்பதும் அவரவரின் தனிநிலை மாந்தத் தேவைக்கும் வாழ்வியல் முறைக்கும் பொருந்திய வகையில் மதிப்பீடு செய்யப்படவேண்டியது. அதனால் ஒருவர் தாழ்வாகவோ, உயர்வாகவோ கருதப்படுவதென்பதும், செல்வம் உள்ளவனை உயர்வாக மதிப்பதும் இல்லாதவனைக் கீழாக மதிப்பதும் போன்ற ஒரு குழகாய மனக்கோட்டமே ஒவ்வொருவர் பெருமையும் சிறுமையும், அல்லது உயர்வும் தாழ்வும் இன்னொருவரால் வரையறுக்கப்படும் மனப்பாங்கு சரியான உயர்மாந்தக் கோட்பாடு ஆகாது.

> பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தந்தம்
> கருமமே கட்டளைக் கல் (505)

> ஒருமை மகளிரே போலப் பெருமையும்
> தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு (974)

— என்று பேராசான் கூறிய உரைகளும், இவ்வகையான முடிபையே கூறுகின்றன. அவரவர் நடைமுறைகளாலும், கடப்பாடுகளாலும் அவரவரே நன்மை, தீமைகளையும், பெருமை சிறுமைகளையும் பெற்றுக் கொள்வர் என்பதே இயங்கியல் உண்மை. உயிரியங்கியலையே அறம் என்று நம் முந்து நூல்கள் உரைக்கின்றன. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்னும் பூங்குன்றனாரின் முதுமொழியிலும், பிறர் அவற்றைத் தரவேண்டா என்னும் பொருளும் உட்படுவது காண்க. (தொடரும்)

ஐயகோ! நம் இளைஞர்கள் இப்படியா பாழாய்ப் போவது?

தோய்பகை முறிக்கும் தூய தமிழ்க் காவலர் பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்!

சில நாள்களுக்கு முன்பு ஓர் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தபொழுது, கிழமை இதழ் ஒன்றைப் பார்க்க நேர்ந்தது. அதில் வெளியாகியிருந்த ஒரு செய்தியினைப் படித்ததும், நெஞ்சம் நடுங்கியது.

அந்தச் செய்திக் கீழே தரப்பட்டுள்ளது.

"அண்மையில் நடிகர் கமலகாசன் நடித்த படமொன்று புதுவையில் திரையிடப்பட்டது. அன்று முதல்காட்சியின்போது, கமலகாசன் சுவைஞர் நற்பணி மன்றத்தினர், அரங்கின் வாயிலில் கமலின் ஆளுயர உருவப்பலகை ஒன்றை வைத்து, அதற்குக் குடம் குடமாகப் பால் முழுக்கம் செய்து, மாலை போட்டு, சந்தனம், குங்குமம் இட்டு, கற்பூரச் சுற்றல் காட்டி, அமர்க்களப்படுத்தி விட்டனர்.

உருவப் பலகையின் காலடியில், நெடுங்கிடையாக விழுந்து வணங்கவும் செய்தனர் சிலர். இதில் மற்றொரு துயரமான காட்சி என்னவென்றால், கமலின் உருவத்திற்குச் செய்த முழுக்காட்டுப் பால் கீழே வழியும்போது, அதனைக் கையிலேந்தி உறிஞ்சிக் குடித்தார்கள் சில வறிய சிறுவர்கள். குடம் குடமாகப் பாலை வீணடிப்பதை விட, அதனைப் பால் கஞ்சியாகச் சமைத்து ஏழைகளுக்கு ஒருவேளை ஊற்றினால், அந்த ஏழை நெஞ்சங்கள் வயிறார வாழ்த்தும்.

ஐயா, இன்றைய தமிழ் இளைஞர்களின் சிந்தனையும், அறிவும் இப்படிச் சீரழிந்துக் கொண்டிருப்பதைப்பற்றி, யார் கவலைப்படப்போகிறார்கள்? நடுவணரசுக்கு முதுகு சொறியவும், அடிக்கடி வெளிநாடு சென்று கூத்தடிப்பதற்குமே இங்கேயுள்ள அரசுக்கு சரியாக இருக்கிறது. இந்நிலைமையில் தமிழினம் தன்னை மீட்டுக் கொள்வதுதான் எங்ஙனம்?

இங்ஙனம், உ.த.மு.க. தொண்டன்,
வள்ளிசெல்வன், ஈரோடு.

குல, மத, கட்சிகள் சார்பின்றித் தமிழினம் ஒன்றுபடுக!

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3] இதழ் எண்: 64 (29-9-1985) [பகுதி-34-35

அ. தி. மு. க. அரசு இந்தியை வரவேற்கிறதா?

இந்திய அரசு இந்தியை வேண்டுமென்றே வலுக்கட்டாயமாகத் திணிக்கிறது என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. தேசிய மொழிகளாகக் கருதப்படும் பிற பதினைந்து மொழிகளுக்கும் இல்லாத சலுகையும், அக்கறையும் இந்திமொழிக்கு உண்டு என்பதற்கு, அதை அரசு அலுவல் மொழியாகவும், தேசிய இணைப்பு மொழியாகத் தேர்ந்தெடுத்திருப்பதும், பிற தேசிய மொழி வளர்ச்சிக்கு ஒரு கோடி உருபா செலவிட்டால், இந்தி மொழிக்கு நூறு கோடி உருபா செலவிடுவதுமே தக்க சான்றுகளாகும்.

இதுவன்றி, அண்மையில் தில்லியில் நடந்த ஆட்சிமொழிக் கருத்தரங்கில், இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி, "இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் இந்தி மொழி பரப்பப்படவேண்டும். இதற்கு எல்லாவகையான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டாகவேண்டும். நாட்டில் பெரும்பாலான மக்கள் பேசுகிறார்கள் என்பதற்காக மட்டுமே இந்திக்கு ஆட்சிமொழித் தகுதி தரப்படவில்லை. அந்த மொழியின் தொன்மை, அதன் வரலாற்றுப் பின்னணி ஆகியவை காரணமாகவே அந்த இடம் அதற்கு அளிக்கப்பட்டுள்ளது" என்று கூறியிருப்பதும், அதற்கொரு வலிவான சான்றாகும்.

இராசீவ் காந்தி, இந்தி மொழிக்குக் கூறிய மூன்று தகுதிகளும் மிகமிகப் பொய்யானவையும், வரலாறு தெரியாத தன்மையுடையனவும் ஆகும். இந்தி மொழி தொன்மையானது அன்று. அதன் வரலாறே ஏறத்தாழ 150 ஆண்டுக்கால முடையதுதான். அதற்கென்று சிறப்பான வரலாறோ, இலக்கிய இலக்கணத் தகுதியோ இல்லை என்பதை இந்திய வரலாற்றியல் மொழியியல் தெரிந்த அனைவருமே அறிவர். மற்றும் அது பெரும்பாலான மக்களால் பேசப்படும் மொழி என்பதும் சரியில்லை. இதுபற்றியெல்லாம் ஏராளமான மறுப்புக் கருத்துகள் கடந்த 50 ஆண்டுக் காலமாகவே சொல்லப்பெற்று வருகின்றன. அவ்வாறிருக்க, இராசீவ் காந்தி இந்தியின் தகுதிகளாகக் குறிப்பிடுவது அறியாமையும், அதிகாரமும், இந்திவெறியும் கலந்த கூற்றே ஆகும்.

எஃது எப்படியாயினும் தமிழ்நாட்டு மக்கள் மும்மொழித் திட்டத்தை, (தாய்மொழி, ஆங்கிலம், இந்தி என்னும் கொள்கையை) என்றுமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதையும், அவ்வாறு இங்கு தந்நல வெறியர்கள் ஒரு சிலர் ஏற்றுக்கொண்டாலும், உண்மைத் தமிழர்கள் யாருமே அதனை ஒப்பமாட்டார்கள் என்பதையும் இந்திய வடநாட்டு இந்திவெறி அரசு உறுதியாக எண்ணிக்கொள்ள வேண்டும். இது நிற்க.

நம்மைப் பொறுத்தவரை இந்தி எதிர்ப்பு என்பது இப்பொழுது வடநாட்டு அரசு ஆக்கிவைத்துக் கொண்டுள்ள அரசியல், அலுவல் முறைச் சட்டப்படி அதிகப் பயன் தரும் என்று நம்பமுடியவில்லை. ஏனெனில், இந்தி அதிகார வெறியர்கள், நம் எதிர்ப்பை என்றுமே மதித்ததில்லை; மதிக்கப் போவதுமில்லை. தமிழ்நாடு தனியாகப் பிரியாதவரை, இந்தி எதிர்ப்பு மட்டுமில்லை, எந்த மக்கள் நலக் கோரிக்கையையும் வடநாட்டு முதலாளியக் கொடுங்கோன்மை அரசு ஏற்கப் போவதில்லை என்பது மட்டுமன்று எண்ணிக்கூடப் பார்க்கப் போவதில்லை என்பதும் நம் அசைக்க முடியாத நம்பிக்கையும் கொள்கையுமாகும்.

இருப்பினும், கடந்த 22-9-85-இல் நம் அன்பிற்கும்-மதிப்பிற்குமுரிய திராவிடர் கழகத்தினர், தொடர்வண்டி நிலையப் பெயர்ப் பலகைகளில் உள்ள இந்தி எழுத்துகள் அழிப்புப்போராட்டம் நடத்தியதை நாம் மதிக்கிறோம்; போற்றுகிறோம். ஏதோ ஒருவகையில் அது தமிழினத்தின் ஒட்டுமொத்தமான இந்தி யெதிர்ப்பைக் காட்டும் ஓர் உணர்வெழுச்சியாக அது இருந்தது என்பதை ஒப்புக்கொள்கிறோம்.

ஆனால், அந்தப் போராட்டத்தை நடத்தவிடாமல் செய்த அ.தி.மு.க. அரசுக்கு அதிலென்ன மனப்புழுக்கம்? எதையுமே தாங்கள்தாம் செய்யவேண்டும் என்ற தந்நலக் கோட்பாடா? அல்லது கலைஞர் ஆதரிக்கின்ற போராட்டமாக அஃது உள்ளதே என்னும் பொறாமையா? அல்லது மனப் புழுக்கமா? அப்படியானால், அ.தி.மு.க அரசு இந்தியை வரவேற்கிறதா? அல்லது இந்தியே நுழைக்கப் படவில்லை என்று கருதுகிறதா? அவ்வாறெல்லாம் அது கருதுவதானால் அதன் அடக்குமுறையை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். மேலும், அந்நிலை உண்மையானால் அதன் அழிவு வெகு தொலைவிலில்லை என்பதை அஃது உணர்ந்து

இதழ் : 59-இன் தொடர்ச்சி :

நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்-9

- கழக முதல்வர் -

50 : நம் உ.த.மு.க. ஏதோ ஓர் ஆசையால் உந்தப்பட்டோ அல்லது பொருள் தொகுப்பதற்காகவோ அல்லது தலைவர் ஆகவேண்டும் என்னும் நோக்கத்திலோ, உடனே தொடங்கப்பெற்ற ஓர் இயக்கமன்று என்பதை முன்பே போதுமான அளவில் நன்கு விளக்கியுள்ளோம். இஃது ஏறத்தாழக் கால் நூற்றாண்டாய்ப் படிநிலை வளர்ச்சி பெற்ற, கனன்று உருவமாகி மலர்ந்த மேனிலைக் கருத்துகளையே கொள்கைகளாக அமைக்கப் பெற்ற ஓர் இயக்கமாகும்.

51 : இதன் எழு கொள்கைகளில் ஏதேனும் மூன்று கொள்கைகளையேனும், இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள இயக்கங்களில் ஒன்றேனும் கொண்டிருப்பதாக நாம் உணர்ந்திருந்தால், இதைத் தொடங்கியே இருக்கமாட்டோம். ஆனால், இப்பொழுது தமிழர்க்காக இயங்குவதாகக் கூறப்பெறும் இயக்கங்களுள் மொழியைப்பற்றி எந்த இயக்கம் கவலைப்படுகிறது? வெறும் 'தமிழ் வாழ்க' என்று வாயளவில் கூறிவிட்டால் போதுமா? அதற்காக சில அடிப்படைக் கூறுகளையேனும் வலுப்படுத்த வேண்டாவா? தூய தமிழில் எந்த இயக்கத்தவர் பேசுகிறார்? அல்லது எழுதுகிறார். அனைத்து இயக்கங்களும் தூய தமிழைப் பின்பற்றுகின்றனவா? ஒன்றேனும் தூய தமிழில் இதழ்களோ பிற அறிக்கைகளோ வெளியிடுகின்றதா? ஓர் இயக்கமாகிலும் தூய தமிழ் வளர வேண்டுமென்றாகிலும் கருதுகின்றதா? அப்படி ஒரு கொள்கை எந்த இயக்கத்திற்கேனும் உள்ளது என்று எவரேனும் கூற முடியுமா?

52. தமிழ் என்றால் தூய தமிழ்தானே! 'தமிழ் வாழ்க' என்றால் தூய தமிழ் வளரவேண்டும்; வாழவேண்டும் என்பதுதானே பொருள் அதுவன்றி, இப்பொழுதுள்ள கலப்புத் தமிழ் வளரவேண்டும். அது வாழவேண்டும் என்று எவராவது நினைக்கமுடியுமா? அனைவரும் தமிழைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதவர்கள்தாமே. தமிழ் கலப்புத் தமிழாகவே இருக்க வேண்டும்; அல்லது இருக்கலாம், அல்லது பொது மக்களுக்கு விளங்கவேண்டும், அதற்காகப் பொதுமக்கள் நடையிலேயே பேசலாம், அல்லது எழுதலாம் என்றன்றோ அனைத்து இயக்கங்களும் கருதிக்கொண்டும், செயல்பட்டுக் கொண்டும் வருகின்றன. இதை எவரேனும் ஆழமாகச் சிந்தித்துத் தமிழ் இவ்வாறே போய்க் கொண்டிருக்கக் கூடாது; அவ்வாறு போய்க் கொண்டிருந்தால் நாளடைவில், பிறமொழிக் கலப்பு மிகுதியாகி, நன்னீரில் சாய்க்கடை நீர் கலக்கக் கலக்க அஃது எப்படிச் சாய்க்கடை நீராகத்தான் போகுமே யொழிய நன்னீர் ஆக முடியாது, என்று கருதி, இம் மொழித் தூய்மையை நாமும் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்று எண்ணி, அதை ஒரு கொள்கையாக அமைத்துக்கொண்டும் அல்லது வளர்த்துக்கொண்டும் செயல்படுகின்றனரா? இல்லையே! அவ்வாறு செய்தால் அன்றோ தமிழ் வளரும்; வாழும்.

53 : பின் தமிழ்வளர்ச்சி என்றாலோ, தமிழ் வாழ்க என்றாலோ, என்ன பொருள்? அஃது அப்படியே இருந்த நிலையிலேயே இருப்பதானால் அஃது எப்படி வளர முடியும்? வாழ முடியும்? தமிழ் ஏற்கனவே ஏறத்தாழ இருபத்தைந்து இருபத்தாறு மொழிகள் கலந்த ஒரு கலப்பு மொழியாகவன்றோ உள்ளது! அது காலத்தாலும், பிறரது ஆட்சியாலும், வேண்டுமென்றே பிறர் செய்த சூழ்ச்சியாலும், கரவாலுந்தானே அப்படிக் கலப்புற்றுக் கிடக்கிறது. அதை நாம் ஏதோ ஓர் அறியாமையாலோ அல்லது அடிமைத்தனத்தினாலோ முன்னர் உணராமல் இருந்திருக்கிறோம். பின்னர் காலப்போக்கில் நமக்கு ஏற்பட்ட ஏதோ ஒரு தெளிவினாலும், ஒரு தன்மான உணர்வினாலும் அதை உணர்ந்து கொண்டோம். உணர்ந்து கொண்டவுடன், அந்த இழிவு நிலையிலிருந்து நம்மையும் நம்மோடேயே சேர்ந்து தாழ்ந்து போயிருக்கும் நம் தமிழையும் நாம் மீட்டுக் கொள்ளவேண்டாவா? அவ்வாறு மீட்டுக் கொள்ளாமற் போனால் நாம்தாம் எப்படி முன்னேற முடியும்? அல்லது நம் தமிழ்தான் எப்படி முன்னேறியதாகக் கருதமுடியும், இதை நாம் உணரவேண்டாவா? உணர்ந்தால செயல்பட வேண்டாவா? அவ்வாறு ஆசைப்படுவதாலேயே அனைத்தும் நடந்து விடுமா? அதற்கு முயற்சிகளையேனும் நாம் செய்யவேண்டாவா? நம்மால் முழுஅளவிலும அந்நிலைகளை மீட்டெடுக்க முடியாவிட்டாலும் நமக்குப்பின்னே வருகிற நம்மினும் அறிவிலும் முயற்சியிலும் சிறந்துவிளங்கும் மக்களேனும், தினைத்துணை முயற்சியைப் பனையளவாக ஆக்கி அதனை முழுமை செய்து முடித்து வைக்க மாட்டார்களா? அதற்கு நாம் தானே விதை போடவேண்டும்; எரு போட வேண்டும். எண்ணிப் பாருங்கள். இந்த நினைப்புடன் எந்த இயக்கம் செயல்படுகிறது. இனத்திற்கே மூலமான இந்த முயற்சியைச் செய்ய முனையாமல் அல்லது இயலாமல் போனால், நம் இனம் முன்னேறுவது எப்படி? எதைக் கொண்டு?

54 : நம்மில் சிலர், 'மொழியில் என்ன கிடக்கிறது? பொருளியலில் முன்னேறுவதன்றோ உண்மையான முன்னேற்றம்?' என்று கேட்கிறார்கள். சிலர் பொருளியலும் கூட அரசியல் முன்னேற்றத்தையன்றோ அடியொட்டி அமைகிறது; எனவே, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டால் அனைத்து முன்னேற்றத்தையும் நாமே பிறகு செய்து கொள்ள முடியாதா?! என்றெல்லாம் வினா எழுப்புகிறார்கள்; அவ் வினாக்களிலெல்லாம் பொருளில்லை என்பதாக நாம் கூறமுடியாது. பொருளியலில் முன்னேறுவதும், அரசியலில் முன்னேறுவதும் நாம் தேவையில்லை என்று எங்குமே எப்பொழுதுமே சொன்னதில்லை. ஓர் இனத்திற்கான முன்னேற்றங்களில் பொருளியல் முன்னேற்றமும், அரசியல் முன்னேற்றமும் இன்றியமையாதவை தாம்; இல்லை என்று எவருமே சொல்லமுடியாது. ஆனால், மொழி முன்னேற்றம் தேவையில்லை என்று எவராகிலும் சொல்ல முடியுமா? அதிலும் தாய்மொழி முன்னேற்றமும் நிலைப்பாடும் ஓர் இனத்திற்கு எத்துணை இன்றியமையாதவை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டாமா?

55 : மொழியின்றி எப்படி ஓர் இனம் அமைய முடியும்? அப்படித் தற்காலிகமாக அமைந்தாலும் எப்படி நிலைப்பட்டு இருக்க முடியும்? ஓர் இனத்தையே அடையாளம் காட்டுவது மொழிதானே! பொருளியலுக்காகப் பொருளியலோ, அரசியலுக்காக அரசியலோ இல்லையே! அவ்வாறானால், எந்த ஒரு நல்ல ஆட்சியின் கீழேனும் மக்கள் அமைந்து வாழலாமே! நாம் உலகிலேயே நல்ல அரசியலமைப்பு என்று நாம் கருதிக் கொண்டிருக்கும் பொதுவுடைமை அரசியலை நடத்திக் கொண்டிருக்கும் உருசியாவுக்கோ அல்லது சீனாவுக்கோ நாம் குடிமக்களாய்ப் போனால் என்ன? ஏதோ ஒரு நல்ல பொருளியல் சான்ற அல்லது பொதுவுடைமைக் கொள்கை சான்ற நல்ல அரசியல் அமைப்புத் தானே நமக்கு வேண்டும்? அஃது உருசியாவாக இருந்தால்தான் என்ன? சீனாவாக இருந்தால்தான் என்ன? அல்லது முதலாளியக் குடியரசுகளாக உள்ள பிரான்சு, மேற்கு செருமனியாக இருந்தால்தான் என்ன? ஏன், கடந்த காலத்தில் வெள்ளைக்காரன் நம்மை ஓரளவு உரிமையுடனும், நலத்துடனுந்தானே ஆண்டான்? அதை ஏன் நாம் ஒப்பவில்லை. அதை அடிமை வாழ்க்கை என்று ஏன் குறைகூறி, விடுதலைக்காகப் பாடுபட்டோம். உண்மை இதுதான். எந்த ஓர் அரசமைப்பாக இருந்தாலும், அது நமமுடைய - நம் இனம் சார்ந்த அரசாக இருக்கவேண்டும் என்னும் விடுதலை உரிமை உணர்வன்றோ அடிப்படையாக இருக்கவேண்டும் என்பது தானே அதற்குக் காரணம்? இந்த உரிமை உணர்வை வெறும் அரசியல், பொருளியலால் மட்டுமே நிலை நிறுத்திக்கொள்ள முடியும் என்றால், இனம் எதற்கு? மக்களெல்லாரும் ஓரினந்தானே? பின்னர் ஏன் உலகில் உள்ள அனைத்து மக்களும் ஒரே அரசின்கீழ் அமையாமல், அல்லது அப்படி ஓர் அரசு வேண்டும் என்பதை எண்ணாமல், அவரவர் இனம் சார்ந்த ஓர் அரசை அமைத்துக் கொள்ள விரும்பவேண்டும்? என்றெல்லாம் எண்ணிப்பார்க்கவேண்டும்!

56: முடிவில், நாம் அமைய விரும்பும் ஓர் அரசு, எத்துணையளவு சிறந்ததாகவும், உயர்ந்ததாகவும், பொதுமை சார்ந்ததாக இருப்பினும், அஃது நம்முடைய அரசாக இருக்கவேண்டும் என்றுதான் இவ்வுலகில் உள்ள ஒவ்வோர் இனமும் எண்ணுகிறது. அஃது உலகியல் நிலையில் பிழையாகாது; கெட்ட நோக்கம் கொண்டதாகவும் இருக்க முடியாது. இவ்வுலகில் உள்ள எல்லா இனங்களும் அதைத்தான் சரி என்றும் ஒப்புகின்றன. எனவே, நாமும் ஓர் இனம்; நமக்கென்றும் ஒரு நாடு, அரசுவேண்டும் என்று எண்ணுவதில் தவறில்லை. அதுதான் இயற்கையும் கூட. அந்த இயற்கையான இன அமைப்பு மொழியாலன்றோ அமைகிறது. மொழி இல்லாவிடில் இனம் ஏது? இனமில்லாவிடில் நாடு ஏது? அரசு ஏது? எனவே, நமக்குப் புறநிலையில் ஓர் இன அரசு எத்துணையளவு தேவையோ, அத்துணையளவு, அகநிலையில், அந்த இனத்தை அடையாளங் காட்ட, கட்டிக் காத்துக் கொள்ள ஒரு மொழி அதுவும் நம் இனத்தின் தாய்மொழி கட்டாயம்

உ. த. மு. க. கருவூர் வட்டக் கிளைத் தொடக்கவிழா!

திருச்சி மாவட்டம், கருவூர் வட்டக் கிளைத் தொடக்க விழா, கடந்த தி. பி. 2016, மடங்கல் 8 (24-8-85) காரிக்கிழமை இரவு 7 மணியளவில், கருவூர் சிறு அஞ்சலியர் (இலிட்டில் ஏஞ்சல்சு) ஆங்கிலப் பள்ளியில் அனைவரும் பாராட்டும் வகையில் சிறப்புற நடைபெற்றது.

திருச்சி, மணப்பாறை, பள்ளப்பட்டி, குளித்தலை, வையம்பட்டி, வேலூர், அரவக்குறிச்சி, சின்ன தாராபுரம், மலைக்கோவிலூர், தான்தோன்றி மலை, பல்லடம் முதலிய அண்டை அயலூர்களில் இருந்து, தென்மொழி அன்பர்களும், உ.த.மு.க. ஆதரவாளர்களும், தமிழ்ப் பற்றாளர்களும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

கருவூர் நகரின் அனைத்து அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், பேராசிரியர்களும், வாணிகர்களும்,

பல்வேறு வகை அலுவலகப் பணியாளர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், தாய்மார்களும் அன்பும்-ஆர்வமும் கலந்திட வருகை தந்து சிறப்புறச் செய்தனர்.

நெடுநாளைய தென்மொழி அன்பரும், கருவூர் வட்ட உ. த. மு. க. செயலரும், பாவலருமான கடவூர். மணிமாறன் அவர்களும், தென்மொழி அன்பரும், பாவலருமான புலவர். கன்னல் அவர்களும், கருவூர் வட்ட உ. த. மு. க. தலைவரும், நெடுநாளைய தென்மொழி அன்பருமான, பள்ளப்பட்டி புலவர். எழில்வாணன் அவர்களும், கல்லூரி மாணவர் பி. செழியன், திரு. புவனேந்திரன் ஆகியோரும் இவ்விழா சிறப்புற அமையப் பல்வகையிலும் இரவு - பகலாக அரும்பாடுபட்டார்கள்.

நகரெங்கிலும் உள்ளூர் - வெளியூர் பேருந்துகளிலும், இருவண்ணச் சுவரொட்டிகள் எடுப்பாக ஒட்டப்பெற்றும், தட்டிகள் வைக்கப்பெற்றும், உ. த. மு. க.-வின் உயர்ந்த கொள்கைகள் தாங்கிய பாவலரேறு ஐயா அவர்களின் பாடலுடன் கூடிய, துண்டு வெளியீடுகளும், இருவண்ண அழைப்பிதழ்களும் வழங்கப் பெற்றும், வெளியூர்களுக்கு அனுப்பப்பெற்றும் விரிவாக விளம்பரங்கள் செய்யப் பெற்றன.

விழா மேடையின் பிற்பகுதியில் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'ப் பதாகை, மிக எடுப்பாகத் தொங்கிய வண்ணம் இருந்தது. மேடையின் முன்னிரு பக்கங்களின்மேல் உ.த.மு.க.-வின் செம்மையும்-வெண்மையும் கலந்த கொடிகள் ஓங்கி உயர்ந்து, 'தமிழின மேம்பாட்டு உணர்வு நல உரைப்பொழிவு கேட்க வாரீர்' எனக் கூவி அழைப்பது போல் அசைந்து பறந்து கொண்டிருந்தன. சாலை ஓரங்களின் இருமருங்கும் உ. த மு. க. கொடிகள், தோரணங்கள் போல் எழிலாகக் கட்டப்பெற்றிருந்தன.

உறைத்த தென்மொழி மறவரும், திருச்சி மாவட்ட உ.த.மு.க. பொருளருமான குழந்தை-ஈகவரசன் அவர்கள், முன்னதாகவே வருகை தந்து பாவலரேறுவின் இசைப் பாடல்களைச் சலங்கைப் பறையொலியுடன் ஏற்ற பண்ணமைத்து இனிய குரலில் பாடித்தமிழினப உணர்வு வெள்ளத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தார்கள்.

விழாவிற்குக் கருவூர் வட்ட உ.த.மு.க. தலைவர், புலவர். திரு.எழில்வாணன் அவர்கள் தலைமையேற்றார்கள். புலவர். திரு. நடேசனார் அவர்கள் தமிழன்னை வாழ்த்துப் பாடினார். கருவூர் வட்ட, உ. த. மு. க. செயலரும், விழாக்குழு அமைப்பாளருமான பாவலர். கடவூர் மணிமாறன், க.மு. அவர்கள் விழாவிற்கு வருகை தந்த பல்திறப் பைந்தமிழ் நெஞ்சங்களையும் அன்பும்-ஆர்வமும், நன்றியுணர்வும் மீதூற வணங்கியும்-வாழ்த்தியும் வரவேற்புரையாற்றினார்கள்.

பின்னர் பாட்டரங்கம் நிகழ்வுற்றது.

'தனித்தமிழ்ச் சான்றோர்கள்' என்னும் சீரிய தலைப்பில நடைபெற்ற பாட்டரங்கில் பாவேந்தர் என்னும் தலைப்பில், 'குறளும்-பொருளும்' இறையரசன் அவர்களும், பாவாணர் குறித்து ஓவியர். அறவாழி அவர்களும், மறைமலையடிகளார் பற்றிப் பாவலர். 'தமிழ்ச்சுடர்' மணிமுத்து அவர்களும், 'பாவலரேறு' அவர்களைப்பற்றி புலவர் நாவை-சிவம் அவர்களும், பலரும் பாராட்டும் வகையில் பாங்குறப் பா விருந்து படைத்து அவையோரைத் தமிழின்பக்கடலில் ஆழ்த்தி மெய்மறக்கச் செய்தார்கள்.

பின்னர் 'தமிழின வீழ்ச்சிக்குக் காரணம் அரசியல் சுரண்டலே! - மக்களின் அறியாமையே! என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. மூசிறி அரசினர் கலைக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவரும், கருூர்த் தமிழ்க் கழகச் செயலருமான பேராசிரியர் கருவை - பழனிச்சாமி அவர்கள் பட்டிமன்றத்துக்குத் தலைமை ஏற்றார்கள். அரசியல் சுரண்டலே என்னும் அணியில் பாவலர் புதுமதியன் அவர்களும், பாவலர் கன்னல் அவர்களும், 'மக்களின் அறியாமையே' என்னும் அணியில் பேராசிரியர் தண்டலைமுத்து அவர்களும், கதிரவன் க.மு. அவர்களும் சொற்போராடினர். மக்களின் அறியாமையே அரசியல் சுரண்டலுக்கு அடிப்படைக் காரணம் என்று நடுவர் அவர்கள் விளக்கியுரைத்தார்கள்.

பின்னர் நெடுநாளைய தென்மொழி அன்பரும், உ.த.மு.க. முதன்மைக் குழு உறுப்பினருமான, தென்மொழி முத்துக்குமரனார் அவர்களும், உ. த. மு. க. துணைப் பொதுச்செயலர் திரு. தென்னவன்கோ அவர்களும், மிகவும் எழுச்சியாகவும் - உணர்வாகவும் இக் கழகம் மொழி, இன, நாட்டுக்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, ஆற்றிவரும் பணிகள் குறித்து எடுத்துரைத்தார்கள்.

அதன் பின்னர் உ. த. மு. கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கருவூர் வட்ட நகர மக்களின் ஆர்வம் போற்றித் தமிழினம் அடிமையுற்றுக் கிடக்கும் நிலையை எடுத்தியம்பியும், ஈழத் தமிழர் படும் இன்னல் குறித்து, மாநில நடுவண் அரசுகள் மேற்கொள்ளவேண்டிய நிலைகள் குறித்தும், இங்குள்ள அரசியல் தலைவர்களின் மக்களுக்கு எதிரான போக்குக் குறித்தும், கலை, அரசியல் பண்பாடு அடிமையுற்றுக் கிடப்பதை மீட்டெடுக்க வேண்டிய நிலையைக் குறித்தும், விரிவாகவும் - முறைபாகவும் உரைத்துத் தமிழின விழிப்பு, ஒற்றுமை வேண்டி, உணர்வும்-அறிவும் சான்ற அரியதோர் எழுச்சியுரையாக 3-15 மணி நேரம் ஆற்றினார்கள். கருவூர் வட்ட உ.த.மு.க. செயலர் திரு.கடவூர்மணிமாறன் அவர்கள் விழாவிற்குவருகைதந்தோர்க்கும்,வாழ்த்தியவர்கட்கும் விழாச் சிறப்புக்குப் பல்வகையிலும் உதவிய பல்துறையினர்க்கும் நன்றியுரைத்தார்கள்.

மருத்துவர் சி. இராமச்சந்திரனார், மருத்துவர் திருமலைசாமி, குளித்தலைத் தமிழன்பர் தமிழ்ச்சுடர் மீ. சு. இளமுருகு-பொற்செல்வி, புலவர். நடேசனார், பேரா. தங்கமணி, காரை. சீ. இராமலிங்கனார். பேரா. கருவை பழனிச்சாமி, சிமலை. பழனியப்பன், திரு. காசிப் பாண்டியன், திரு. பி. குமாரசாமி, திரு. கண்ணதாசன், திருவாட்டி. சத்தியபாமா, திருவாட்டி சகுந்தலா-கன்னல் ஆகியோரும், பிறரும் இறுதிவரை அமர்ந்திருந்து பாவலரேறு அவர்களின் உரைப்பொழிவு கேட்டு இன்புற்றனர்.

இறுதியாக வெளியூர் அன்பர்கட்கும், அமைப்பாளர்கட்கும் சிற்றுண்டி விருந்து வழங்கப்பெற்றது. நள்ளிரவு 1-30 மணி வரை அமைதியாகக் கேட்ட பொதுமக்கள், ஐயாவின் சொற்பொழிவால் கருவூர்ப் பகுதி மக்களிடத்தே விழிப்புணர்வும், அசைக்க வியலாத ஓர் எழுச்சியும் ஏற்பட்டுள்ளதென்றும், இத்தகைய விழா நிகழ்ச்சிகள் அடிக்கடி ஏற்பாடு செய்யப்பெறல் வேண்டும் என்றும், நிகழ்ச்சி அமைப்பாளரிடம் கூறினார்கள்.

செய்தி : கடவூர்-மணிமாறன், செயலர்,
உ. த. மு. க., கருவூர்.

உ.த.மு.க. உறவு மடல்

ஆகவே, 'திராவிட' நினைவாளரே!

தோழமையுள்ளவர்களே,

தமிழன் என்று கூறினால் 'திராவிடர் கொள்கை' சரிந்துவிடும் எனச் சில தலைமைகள் நினைக்கின்றன. தமிழினம் என்ற உலகுதழுவிய நோக்கினை நாம் பெறுதல் வேண்டும். உழைக்குமினம், பாட்டாளிக் குணம் கொண்டது நம் இயக்கம் ஆதல் வேண்டும்.

தமிழீழம் வேண்டும்; தமிழ்நாடு வெல்வோம் என்ற பேச்சு செயலாதற்கு நம் கவனம் 'மக்கள் வாழ்வியலில் ஆழங் கொள்ளுதல் வேண்டும்! நாம், முற்ற முடிபாக மக்களின் விடுதலையைக் கொண்டு வருதல் என்பது ஒரு தொலைநோக்குடைய செயல் ஆகும்! ஆனால், தமிழ்நாடு, தமிழ்ஈழம் என்ற ஒரு வரைவுக்குள் தேசிய நோக்கில் காண்கின்ற விடுதலை முதல் தேவையாகும். இதற்காக நாம் 'தேசிய இன' நோக்கிலேயே திடமிடுதல்வேண்டும். இதில், குறுகிய சாதி, சமயக் கோளாறுகளிலிருந்து தமிழர் விடிவுபெற முடியும். இந்த 'விடிவு' தமிழரை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்லும். புரட்சி, மாற்றம் என்ற வரலாற்று இயங்கியல் நில்லாதியல்வதன்றோ?

நாற்பது அகவை தாண்டிய 'திராவிட இயக்கப் பற்றுடைய எளிய மக்களிடம்', சாகும் போது 'கறுப்பு சிவப்பு'த் துணி போர்த்தப் பெறவேண்டும் என்ற ஆசையே எஞ்சியிருப்பதைக் கண்டேன்? அவர்களின் நீறுபட்டுப்போன விடுதலையுணர்வு என்கிற சாம்பலிலிருந்து புயல் பறவை'களாகப் 'புதிய மாந்தன்' தோன்றுவான் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர் பலர்.

தமிழ் மண்ணில், இந்தியத் துணைக் கண்டத்தில் 'தேசிய மணம்' சுடர்விடத் துடிக்கின்றது. அவற்றை அத் தீச்சுடர்களைக் கனத்த சட்டங்கள் எனும் போர்வைகளால் பொத்தி அவித்திட முயல்கின்றனர்.

மக்கள் 'சட்ட'ங்களைச் சட்டை செய்யாததாலேயே உயிர் வாழ்வு கொண்டு வருகின்றார்கள். எனவே, இயற்கையான விடுதலையுணர்ச்சி வேகம் பெறும் காலமிது. விழிப்பாயிருப்போம்!

— பறம்பை அறிவன்

'அண்ணு!'

'என்ன தம்பி?'

'இலங்கையில் உள்ள தமிழர்களை நாள்தோறும் நூற்றுக்கணக்கில் சிங்களப்படையினரும் சிங்கள வெறியர்களும் பலவகையாகக் கொன்று குவித்து வருகிறார்களே, அதனைத் தட்டிக் கேட்பதற்கு உலகத்தில் ஒரு நாடும் இல்லையா?'

'இருப்பதாகத் தெரியவில்லையே! என்ன செய்வது? நம்முடைய நெஞ்சம்தான் பதறித் துடிக்கிறது!'

இவ்வளவு கொலை கொள்ளை அட்டூழியங்களுக்குப் பிறகும் தமிழர்கள் சிங்களவர்களோடு சேர்ந்து வாழ முடியுமா அண்ணு?'

'முடியாது தான்!'

'அவ்வாறிருக்க இங்குள்ள பல கட்சிகளும் இதழ்களும் இலங்கை ஒன்றாகவே இருக்க வேண்டும் என்று கூறுகின்றனவே!'

'ஆமாம்'.

'இலங்கையில் அழிக்கப்படும் தமிழர்களில் 'பிராமணர்கள்' என்பவர்கள் இல்லையோ?'

'அப்படித்தான் தோன்றுகிறது!'

'அங்கு அழிக்கப்படும் கூட்டத்தில் சில நூறு பிராமணர்களாவது இருந்திருப்பின், அவை அப்படிக் கூறுமா? 'தமிழ் ஈழம் உடனே வேண்டும்' என்றல்லவா கூறும்?'

'எனக்குத் தெரியாது தம்பி!'

- தமிழ்வேள்.

உ. த. மு. க. கொள்கைகள் பரவினால் உண்டு விடுதலை!

தமிழீழம் விடுதலை பெறுமா ? வழியென்ன ?

- மணிமாறன். -

ஈழத்திலே தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர் - தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழ்க் குழந்தைகள் எரியும் தீயில் எறியப்பட்டுச் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஈழத்தமிழ் இனம் சிங்களக் காட்டு விலங்காண்டிகளால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழகத் தமிழ் மக்கள் கொதித்தெழுந்துள்ளோம். ஆனால், செய்வது என்ன என்பது தெரியாது தவித்துக்கொண்டு இருக்கிறோம்.

சிறையில் அடைத்து வைத்திருந்த தமிழ் இளைஞர்களைக்கொன்று குவித்த சிறுமதிச் சிங்களவர்களைச் சின்னாபின்னமாக்க நமது உள்ளங்கள் உந்துவேகம் கொள்கின்றன.

ஆனால், சிங்களவர்கள் வாழும் நாடு தனி நாடு. அங்கே நாம் செல்வது அனைத்துலகச் சட்டப்படி குற்றம் என்று திரித்துக்கூறி, நம்மைச் செயலற்றவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றனர்.

எம் குலப் பெண்களின் கற்பைச் சூறையாடிக் கொண்டிருக்கும் காட்டு விலங்காண்டிச் சிங்களக் கூட்டத்திற்குச் சாவு மணி அடிக்க நமது கைகள் துடிக்கின்றன.

நம் துடிக்கும் கைகளைக் கட்டிப்போட்டு, நம்மைக் கையாலாகாதவர்களாக ஆக்க முயற்சிகள் நடந்துக் கொண்டிருக்கின்றன.

தமிழனுக்குப் பிறந்து, தமிழ் பேசும் ஒரே குற்றத்திற்காக ஈழத் தமிழ்க் குழந்தைகள் கொடூரமாகக் கொல்லப்பட்டுத் தீயில் தூக்கி எரியப்படுகின்றனர்.

இங்கே நாம் ஏதும் செய்ய முடியாத ஏமாளிகளாக ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

"பிழைக்கப்போன தமிழர்கள், இலங்கைத் தீவை பிரித்துக் கொடுக்கும்படி கேட்பது நயன்மையா? ஈழத் தமிழர்கள் பிரிவினைக் கேட்பதால்தான் சிங்களவர்கள், தமிழர்களைக் கொல்கிறார்கள்" என்று உண்மையைத் திரித்துக் கூறித் தமிழ் மக்களை ஏமாற்ற, கருத்துப் பரப்பல் செய்து கொண்டிருக்கின்றனர் சிலர்.

ஈழத்தில் வாழும் தமிழர்கள் எல்லாரும் பிழைக்கப் போனவர்களா ?

இல்லை! _ .... இல்லவே இல்லை!

ஈழத்திலே வாழும் தமிழர்களில் 25 இலக்கம் பேர் அந்த நாட்டின் சொந்தக்காரர்கள். 10 இலக்கம் பேர்தாம் இங்கிருந்து சென்றவர்கள் ?

தமிழகத்திலே தமிழர்கள் எப்படி வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே வாழ்கின்றார்களோ, அது போன்றே ஈழத் தமிழர்களும் இலங்கையிலே வரலாற்றுக்காலம் தொடங்கும் முன்பிருந்தே வாழ்ந்து வருகின்றார்கள். சிங்களவர்கள் இலங்கைக்கு வருமுன்பிருந்தே ஈழத்தமிழர்கள் அங்கே வாழ்கின்றார்கள்.

தமிழ் கூறும் நல்லுலகம் என்பது சேர, சோழ, பாண்டிய நாடுகள் அடங்கியது மட்டுமன்று, ஈழத் தமிழ் நாடும் இணைந்ததுதான்.

சோழ நாட்டிலுள்ள தஞ்சாவூரும், திருச்சியும், பாண்டிய நாட்டிலுள்ள மதுரையும், நெல்லையும் எப்படித் தொன்று தொட்டுத் தமிழினம் வாழும் பகுதிகளாக இருக்கின்றனவோ, அப்படியே ஈழத்தமிழகத்தில் உள்ள யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற பகுதிகளும் தமிழர் பகுதிகளாக இருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், ஈழத் தமிழ் மன்னனைத் தோற்கடித்துத் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்தினர் சிங்களவர்கள் என்று கேள்விப்பட்டவுடன், கரிகாற் சோழன் இலங்கைமீது படையெடுத்துச்சென்று, சிங்கள மன்னனை வென்றான். ஆயிரக் கணக்கான சிங்களவர்களைச் சிறைப்பிடித்து வந்து கல்லணையக் கட்டினான் என்று வரலாறு கூறுகின்றது.

12 ஆம் நூற்றாண்டிலே, ஈழத்தமிழ் மன்னனுக்குத் தொல்லை கொடுத்தான் சிங்கள மன்னன். அப்போது, சோழ நாட்டை ஆண்டு கொண்டிருந்த குலோத்துங்க சோழன், தனது படையை இலங்கைத் தீவிற்கு அனுப்பிச் சிங்கள மன்னனைத் தோற்கடித்தான். ஈழத்தமிழ் மன்னனுக்கு ஏற்பட்ட இடையூறுகளைக் களைந்தான் என்று வரலாறு சாற்றுகின்றது.

இப்படி இலங்கையிலே ஆட்சி செய்து கொண்டிருந்த ஈழத் தமிழ் இனத்தைப் பார்த்துப் பிழைப்பிற்காகச் சென்றவர்கள் என்று கருத்துப் பரப்பல் செய்து கொண்டிருக்கின்றது ஒரு வஞ்சகக் கும்பல்; வேறு யாரிடமுமன்று; தமிழ் மக்களிடையே கூறி அவர்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறது.

வெள்ளைக்காரர்கள் ஏறத்தாழ 150 ஆண்டுகள் ஆட்சி செய்தார்கள். அவர்கள் காலத்தில் தான் இலங்கைத் தீவு ஒரே ஆட்சியின்கீழ் இருந்தது.

1948 ஆம் ஆண்டு, இலங்கைத் தீவிற்கு உரிமைக் கொடுத்துவிட்டு, வெள்ளைக்காரர்கள் சென்று விட்டார்கள்.

அப்போது குடியரசு ஆட்சிமுறை இருந்தது. தமிழுக்கும், சிங்கள மொழிக்கும் சம உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. தமிழர்களும், சிங்களவர்களும் சமமாக மதிக்கப்பட்டு, வாய்ப்புகளும், வசதிகளும் சமமாக்கப்பட்டிருந்தன.

பல இன மக்கள் ஒரே ஆட்சியின்கீழ் ஒன்று சேர்ந்து அமைதியாக வாழமுடியும் என்பதை உலகத்திற்குக் குடியரசு ஆட்சிமுறை மெய்ப்பித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

குடியரசு நாட்டில் அத்தனை இன மக்களும் சமமாக மதிக்கப்படுகின்றனர். சிறுபான்மை இன மக்களுக்குத் தனிப் பாதுகாப்பும், சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன. அவர்களின் மொழியும், பண்பாடும் பேணிக் காக்கப்பட்டுச் சமமாக மதிக்கப்படுகின்றன. சம வேலை வாய்ப்புகளும், வசதிகளும், உரிமைகளும் அளிக்கப்படுகின்றன. இவ்வகைப் பாதுகாப்புகளைக் குடியரசு ஆட்சிமுறை கொடுக்கிறது. ஆகவே, பல இன மக்கள் இணைந்து மகிழ்ச்சியோடு, ஒற்றுமையாக வாழும் அரசியல் அமைப்பாகக் குடியரசு ஆட்சி முறை திகழ்கிறது.

இலங்கையிலும் குடியரசு ஆட்சிமுறை நிறுவப்பட்டது. ஆகவே, ஈழத்தமிழ் இனமும் சிங்களவர்களுடன் இணைந்து வாழ இசைந்து ஒரே ஆட்சியை 1948-இல் அமைத்தனர்.

கடந்த 25 ஆண்டுகளாக நடந்துவரும் செயல்களைக் கண்ணுற்றால், சிங்களவர்களோடு தமிழர்கள் சேர்ந்து வாழ முடியாது என்ற கட்டாய நிலை சிங்களவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது, நன்றாகப் புலப்படும்.

சுவிட்சர்லாந்து என்ற நாட்டிலே, நான்கு மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். நான்கு மொழிகளுக்கும் சம உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. நான்கு மொழி பேசும் மக்களும் சமமாக மதிக்கப்பட்டுச் சம வேலை வாய்ப்புகளையும், வசதிகளையும் பெற்றுள்ளனர். சம உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, அந்த நான்கு மொழி பேசும் மக்களும் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்கின்றனர். நாகரிகமிக்க மக்களாகக் கருதப்படுகின்றனர். உலகத்திலேயே தலைசிறந்த குடியரசு ஆட்சியாக, சுவிட்சர்லாந்தின் ஆட்சிமுறை என்று மதிக்கப் படுகின்றது.

நான்கு மொழிகளைப் பேசும், நான்கு இன மக்கள் சுவிட்சர்லாந்து நாட்டிலே சம வாய்ப்புகளையும், உரிமைகளையும் பெற்று ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ முடிகிறதென்றால், இரண்டு மொழிகளையுடைய இலங்கையில் சிங்களவர்களும், தமிழர்களும் ஒற்றுமையாக வாழ்வதென்பது மிகவும் எளிதான செயலாகும்.

பெரும்பான்மையாக உள்ள சிங்களவர்கள் நாகரிகமுள்ளவர்களாகவும், குடியரசுப் பண்பு உள்ளவர்களாகவும் இருந்தால், இது இயல்வதாக இருந்திருக்கும். ஆனால், அறிவே இல்லாத இரண்டுகால் விலங்குகள்போல் சிங்களவர்கள் காட்டு விலங்காண்டித்தனமாக நடந்து கொண்டிருப்பதால் அவர்களுடன் தமிழர்கள் ஒற்றுமையாக இணைந்து வாழ்வது என்பது முடியாமல்போய் விட்டது.

1948-இல் இலங்கைக்கு விடுதலை கொடுக்கும் போது, சிங்கள மொழிக்கும், தமிழுக்கும் சம உரிமை கொடுக்கப்பட்டிருந்தது,

விடுதலை கிடைத்துச் சில ஆண்டுகளில் "சிங்கள மொழிதான் இலங்கையின் ஆட்சிமொழி; தமிழுக்குச் சம உரிமை கிடையாது" என்று சட்டமியற்றித் தமிழை ஆட்சி மொழித் தகுதியிலிருந்து இறக்கி விட்டனர்.

அப்போது ஈழத்தமிழர்கள் அறப்போராட்டம் நடத்திப் பார்த்தனர். அது பலன் அளிக்கவில்லை.

தமிழீழ மக்கள் விடுதலைப் போராளிகளுக்கு, மூலனூர் வட்டார, வட்டிக் கடைக்காரர்கள்

கோவையில் பொருளளிப்பு!

மூலனூர் வட்டாரத்தைச் சார்ந்த பலர், கோவை நகர்ப் பகுதியில் வட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தமிழீழ விடுதலையில் மிகுந்த ஆர்வமுடைய அன்பர், திரு. பாலுச்சாமி அவர்கள், த. ம. வி. க. போராளிகளாகிய செல்வன் சிவபாலன், செல்வன் சிவம் ஆகிய இருவரையும் அழைத்துச் சென்று போராளிகளைத் தங்கள் நிலைகளைத், துயரக் கதைகளை எடுத்துக் கூறச்சொன்னார். நகர்ப் பகுதியில் தொழில் செய்பவர்களாதலால், ஈழத்தின் நிலையை நன்கு அறிந்திருந்தனர். போராளிகளிடம் நேரில் மேலும் பல ஐயப்பாடுகளை உசாவிக்கேட்டு, அங்கு நடைபெறும் கொடுமைகளை ஐயமறத் தெளிந்து, பொருளுதவி செய்ய முன் வந்தனர்.

நாம் ஏதோ சிறு தொகை கொடுத்தால் கடமை முடிந்தது என்று எண்ணாமல், மூன்று அன்பர்கள் தங்கள் மிதியுந்தில் போராளிகளை ஏற்றிக்கொண்டு, நகர் முழுவதும் பரவியிருக்கும் தங்கள் நண்பர்கள் அனைவரிடமும் சென்று உரிமையோடு நீங்கள் நூறு கொடுங்கள், ஐம்பது கொடுங்கள் எனக்கேட்டு வாங்கி, உரு. 2405-ஐ திரட்டிக் கொடுத்ததும், அதற்காக அன்று மாலை நல்கிய கடும் உழைப்பும் போற்றுதலுக் குரியனவாகும். அதோடு, போராளிகளைத் தமது உறவினராக எண்ணித் தமது இல்லத்திலேயே உணவளித்து, சிவபாலன் என்ற போராளிக்கு உடனடியாகச் சென்னை வருமாறு அழைப்பு வந்ததையடுத்து. 'நான் இல்லத்தில் உணவருந்துவது இதுவே கடைசியாகக் கூட இருக்கலாம்" என, எவ்வகை அச்ச உணர்வுமின்றி மிகப் பெருமிதத்தோடு கூறியதைக் கேட்டு, வியந்து கண்ணீர் சிந்திய அன்பர் பழனிச்சாமியின் அன்பு, அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

செய்தி: புலவர். அறிவுடைநம்பி

முகவர்களுக்கு எச்சரிக்கை!

கடுமையான பொருளியல் இடர்ப்பாட்டிலும், வினையழுத்தங்களிலும் உழன்று "தமிழ்நிலத்தை" மொழி, இன, நாட்டளவில் விடுவிப்பதையே தம் உயிர்க் கொள்கையாகக்கொண்டு, கடந்த இருபத்து ஆறு ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கும் 'தென்மொழி இதழுக்கும், 'தமிழ்நிலம்', 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களுக்கும் முகவராய் இருக்கும் அருந் தமிழ் நெஞ்சங்கள் பலர், நம்முடைய இக்கட்டையும், இடர்ப்பாட்டையும் செவ்வனே உணராமல் அலுவலகத்தினரும், ஆசிரியர் அவர்களும் விடுத்திருந்த மடல்களையும் பொருட்படுத்தாமல், பட்டியல் தொகைகளை அனுப்பாமலே இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

இறுதியாக ஆசிரியர் அவர்கள் விடுத்திருந்த 'எச்சரிக்கை மடலுக்'ப் பின்னும் தொகை அனுப்பாமல் இருக்கும் நன்னெஞ்சங்கள், இச்செய்தி கண்டும் விடுக்கவில்லையாயின், இவ்விதழையடுத்து வருகின்ற அடுத்த 'தமிழ் நிலம்', 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' இதழ்களில், அவர்களின் பெயர்களை வெளியிட வேண்டிவரும் என்பதை எச்சரிக்கையுடனும், வருத்தத்துடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காக் கண்டத்திலுள்ள கனடா என்ற நாட்டில் ஆங்கில மொழி பேசும் இங்கிலாந்து மக்களும், பிரஞ்சு மொழி பேசும் பிரஞ்சுக்காரர்களும் குடியேறினார்கள். அந்த இரண்டு இனமும் சேர்ந்து குடியரசு ஆட்சியை அமைத்துக்கொண்டன.

கனடா நாட்டில் ஆங்கிலேயர் அதிகமாக இருப்பதால் ஆங்கில மொழிக்கு முதன்மை கொடுத்துப் பிரஞ்சு மொழியைப் புறக்கணிக்க முயற்சி செய்தனர். அங்குள்ள பிரஞ்சு மொழி பேசுவோர் வெகுண்டு எழுந்தனர்.

கனடாவிலுள்ள பிரஞ்சுமொழி பேசுவோர் அதிகமாக வாழும் பகுதிகளைத் தனியாகப் பிரித்துத் தனி நாடு அமைக்கும் முயற்சியில், பிரஞ்சு மொழி பேசும் மக்கள் ஈடுபட்டனர்.

ஆங்கிலம் பேசுவோர் தங்கள் தவற்றையுணர்ந்து பிரஞ்சு மொழிக்குச் சம வாய்ப்பைக் கொடுக்க ஒப்புக் கொண்டனர். பிரிவினை எண்ணத்தைப் பிரஞ்சுக்காரர்கள் கைவிட்டனர்.

(தொடரும்.)

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்குமேல், முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- அமைச்சர்.

தமிழீழம்-தமிழ்நாடு விடுதலைபெற வேண்டும்!

உங்கள் மடல்கள்

1. உங்கள் இயக்கத்தில் மிஞ்சுபவர் எத்தனைப் பேர்?

ஐயா, தமிழ்மொழிக்கும் தமிழ் குமுகாயத் திற்கும் தாங்கள் ஆற்றிவரும் தொண்டினை மிகவும் போற்றுபவர்களில் நானும் ஒருவன். தன்னல மின்றித் துணிவுடன் செயலாற்றும் தங்களின் போக்கை அறிந்து வருபவன் என்ற முறையில் என் மனத்தில் தெரிவிக்கத் தோன்றியவற்றை இம் மடல் வாயிலாக வரைகின்றேன்.

தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்களுடன் தாங்கள் அவ்வப்பொழுது ஈடுபாடு கொண்டும், மாநாடுகளில் கலந்து கொண்டும், மநுதரும எரிப்புப் போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டும், செயலாற்றி வந்தீர்கள்; ஆனால் உ.த.மு. கழகத்தைத் தொடங்கிய பின்னர் நாளுக்கு நாள் அவ்வியக்கங்களுடன் தங்களுக்கிருந்த ஈடுபாட்டில் முறிவு ஏற்பட்டு இடைவெளி அதிகமாகிக்கொண்டே செல்வதைக் காணும்போது வருத்தம் ஏற்படுகிறது.

அண்மைக் காலங்களில் தாங்கள் எழுதுவதிலும், பேசுவதிலும் இவை தென்படுகின்றன. எடுத்துக் காட்டாகத் தமிழ் எழுத்துச் சீர்திருத்த முறைமையை ஏற்றுகொள்ளாமை, இலங்கைத் தமிழர் போராட்டத்தில் நேரிடையாகக் கலந்து கொள்ளாமை, இட ஒதுக்கீட்டுச் சலுகையை மறுத்தல், மற்றும் இந்தி மொழி வல்லாளுமை எதிர்ப்பு பற்றிய செயல்பாடு போன்றவையாகும்.

போதுமான கல்வி அறிவும் நாகரிக வளர்ச்சியும் பெற்றிராத தமிழ்மக்கள் நடுவில் 'இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்' நடத்த எண்ணித் தனி கழகம் தொடங்கினீர்கள். ஒரு தனித் தலைமைச் சிறப்பை எதிர்பார்த்து ஏனைய இயக்கத் தலைவர்களிடம் நடவடிக்கைகளை மேற்கொள்ள முனையும்போது ஏற்படும் ஏமாற்றங்கள் வெறுப்பாகவும், காழ்ப்புணர்ச்சியாகவும் இனந்தெரியாமல் உருவாக்கம் பெறுகின்றன. இனமானப் பணியாற்றுவோர் தன்மான இழப்புக்கும் ஆளாக நேரிடுவது இயல்புதான்.

உ.த.மு. கழகமானது தற்பொழுது தமிழ்நாட்டில் கல்வியறிவு உடையவர், தமிழார்வம் உடையவர் அரசுப் பணியாளர் முதலியோர் நடுவில் மட்டுமே உள்ளது. இதுபோதுமா? பெரியதொரு மக்கள் இயக்கமாக எப்படி வளர்வது? இப்பொழுது கூட உ.த.மு.க.வில் உறுப்பாண்மை பெற்றிருக்கும் முயற்சியாளர்களில் பலர் திராவிட இயக்கங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்; இவர்களையும் ஒதுக்கிப் பார்த்தால் மிஞ்சுபவர் எத்தனைப் பேர்?

பாவாணரின் உலகத் தமிழ்க் கழகத்தையே தாங்கள் தொடர்ந்து நடத்தி மொழி, பண்பாடு மறுமலர்ச்சிப் பணிகளை ஏனைய இயக்கங்களின் அரவணைப்புடன் செய்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

தந்தை பெரியார் தனி இயக்கம் கண்டார் என்றால் அவரிடம் ஏனைய தனிச் சிறப்புகளுடன் போதுமான பொருளியல் சாய்கால்களும் நிறைய இருந்தன, அதனால் எவரையும் எதிர்பாரமல் தம் போக்கில் எதிர்நீச்சல் போட அவரால் முடிந்தது.

இதனை எண்ணிப்பார்க்கையில் பாவலரேறு ஐயா அவர்கள் நெருக்கடிகள் நிறைந்துள்ள இன்றைய தமிழகத்தில், முன்புபோலத் திராவிட இயக்கங்களுடனான உறவுகளை நெருக்கமாக்கிக் கொண்டு செயல்படுவது சிறப்பு என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்களது தமிழறிவும், ஆற்றலும் வீணாகிப் போகாமல் தமிழ்நாட்டிற்குப் பயன்படவேண்டும் என விரும்பும், அன்பன்.

— இரா. செழியன், அனந்தபுரம்.

2. தமிழினத் 'துரோகி' நீங்கள்!

பெருமதிப்பிற்குரிய, பாவலரேறு ஐயா அவர்கட்குத் தமிழ்நிலம் அன்பர், இரா. கிருட்டிணமூர்த்தி (கல்பாக்கம்) எழுதும் கடிதம்.

தங்களின் தமிழ்நிலம் இதழில், திராவிடர் கழக மாநில மாநாடு பற்றி எழுதியிருந்ததைக் கண்ணுற்றோம்; தங்களின் கூற்றுப்படி, திராவிடர் கழகம், ஐந்து ஆண்டுகளாகச் சொன்னதை மீண்டும் மீண்டும் சொல்வதற்கு அதிகப் பணச் செலவு செய்து மாநாட்டை நடத்த வேண்டுமா? எனக் கேட்டுள்ளீர். சரி, அப்படி பொருட் செலவையும், உழைப்பையும் கொடுத்ததால்தானே, இடஒதுக்கீட்டுச் சிக்கலில், தமிழக அரசு ஓர் உறுதியான நடவடிக்கையாக, ஒரு புதிய கட்டளையைப் பிறப்பித்துள்ளது? இன்றைக்குத் தமிழ் மக்களின் நலனுக்காகத் திராவிடர் கழகம் நடத்தாத போராட்டம், உண்டா? இன்றைக்குத் தமிழகம் இருக்கின்ற நிலையில், தாங்கள் நினைப்பது போல், ஒரே முயற்சியில் தனித் தமிழகம் பெறுவது இயலுமா என்பதை மக்கள் மனநிலையைப் பார்த்து முடிவு செய்ய வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுப் பாதுகாப்புப் பேரணியில் கூட அக்குமுகத்தினர் நிலை உணர்ந்து அதிக அளவில் கலந்து கொள்ளாத இந்நிலையில், தங்களின் முடிவை நாங்கள் சரியென ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மேலும், தென்மொழி, சுவடி: 21, ஓலை-9 இல் தென்மொழி அன்பர் மானமிகு, க. திராயவேல் (சென்னை-1) அவர்களின் மடலைக் கண்டோம். அதில் தமிழர் தளபதி, கி. வீரமணி அவர்கள் ஏதோ, மகிழ்ச்சி உலகில் அதை நுகர்ந்து வாழ்வது போல எழுதியிருக்கிறார்: ஆனால், தமிழர்களின் இழிநிலையை நீக்குவதற்காக அல்லும் பகலும் பல துன்பங்களை ஏற்றுப் பார்ப்பன அடியாட்களின் கொலை வெறிக்கு ஆளாகி வருவது தாங்கள் அறியாததோ?

தமிழர்கள் முன்னேறாமல் இருப்பதற்குக் காரணியமாக அமைவது, நம் தமிழர் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் (உங்களையும் சேர்த்து) தங்களுக்கிடையே உள்ள வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு நில்லாமையேயாகும்.

ஒரு நாடு விடுதலை அடைய வேண்டுமெனில், மக்களை மக்கள் நிலையிலிருந்து விடுதலை உணர்வு பெற்ற நிலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்; அதை விட்டுவிட்டுத் தங்களைப்போல், இந்நிலைக்கு மக்கள் வரவேண்டும் என்று கூறுவது, குமுகாயவியலின் அடிப்படையைக்கூட அறியாத் தன்மையாகும்; மேற்கூறியவை உண்மை என்பதற்கு, 'என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்' என்பதாகத் தாங்கள் புலம்பிய புலம்பலே சான்றாகும்:

ஒரு நாட்டு விடுதலைக்காகப் பாடுபடும் இயக்கம் சில நேரங்களில் சூழ்நிலைக்கேற்ப வளைந்து, நெளிந்து செல்லவேண்டிய தேவை ஏற்படும். இது உலக இயற்கை. இது தங்களுக்குத் தெரியாமலிருக்கும் என்று எண்ண முடியவில்லை. திராவிட இயக்கத்தின் மீது காழ்புணர்ச்சியின் காரணியமாய் இவ்வாறு எழுதுகிறீர்கள் என எண்ணுகிறோம். தாங்கள் எவ்வளவு இழிவாக தி.க.வைப் பற்றி எழுதியும் இதுவரையில் அவர்கள் தங்களைப் பற்றி எந்த வகையான கீழ்த்தரமான திறனாய்வுகளையும் செய்ததில்லை. இனியும் தாங்கள் தங்களைத் திருத்திக் கொண்டு பெருந்தன்மையோடு தமிழகத்துக்கு உழைக்க முன்வரவில்லையெனில், தாங்கள் எதிர்காலத் தமிழக வரலாற்றில் தமிழின இரண்டகராக (துரோகியாக) வருணிக்கப்படுவீர்களென வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— இரா கிருட்டிணமூர்த்தி, கல்பாக்கம்-2.

3. வேற்றுமையை மறந்து போராட அணியமாகுங்கள்!

தனித்தமிழ் ஞாயிறுக்கு!

ஐயா, கடந்த சில நாள்களாகக் கலைஞர் அவர்களைக் கடுமையாகச் சாடி வருகின்றீர்கள். தென்மொழி வழியிலும் தமிழ்நிலம் வழியிலும் நேரிடையாகவும், மறைமுகமாகவும் கலைஞரைக் குறைகூறி வருவது அவ்வளவு நல்லதன்று. தமிழ்நாட்டு விடுதலைக்குப் போராட வாருங்கள் என்று அழைப்பு விடுத்து அவரை நெஞ்சுதோறும் குத்திப் புண்ணாக்குவது போல் உள்ளது தங்களின் இடித்துரை.

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கொடுப்பா ரிலானும் கெடும்' என்றபடி இடித்துரை செய்ய வேண்டியதுதான். இடிப்பார் இலாததனால்தான் கலைஞர் கெட்டொழிந்தார்; இடித்துரைக்கிறேன் என்று சொல்லி எதிர்காலத் தமிழ் விடுதலைக்குத் தடைக் கல்லாக இருக்கவேண்டாம் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

விடுதலை என்பது தானாகப் பழுத்து நம் கைகளில் விழும் கனியன்று. எத்தனையோ போராட்டங்களுக்குப் பின்னர் — எண்ணற்ற உயிர்களை ஈகம் செய்த பின்னர் கிடைக்கக் கூடியது. எடுத்த எடுப்பிலேயே கைகளில் கருவி ஏந்துவதில்லை. மென்மையான அறப்போராட்டமாகி, அது மெல்ல மெல்ல உருமாறி உரமேற்க் கையில் கருவியேந்த வேண்டிய இன்றியமையாமையை ஏற்படுத்தும். எனவே ஒரு போராட்டத்தில் மென்மையும் வன்மையும் இருக்கும். முதியோர் போராட்டம் கருவியேந்தாமல் அமைதி வழியிலும் தன்னை வருத்துவதிலும், இளைஞர் போராட்டம் கருவியேந்தி விடுதலைக்கான தடைகளை அகற்றுவதிலும் இருக்கும். இரண்டுமே வேண்டும். பின்னது வலிமை பெற முன்னது உறுதியாகத் தேவை. இப்போதுதான் கலைஞர் அவர்கள் தமிழக விடுதலைப் போருக்குத் தம்மை அணியம் செய்கிறார். போராட்ட வழி எத்தன்மைத் தாயினும் அதன் நோக்கம் நன்றாக இருந்தால் அதுவே சரி. கலைஞரின் போராட்டம் அப்படித்தான் தமிழீழம் பெறுவது மட்டும் குறிக்கோள் அன்று; தமிழகத் திற்காக விடுதலையை விதைப்பதும் அப் போராட்டத்தின் நோக்கமாகும். எனவே இப்போதே திடுமென்று போராட்டத்தில் குதித்து உள்ளதையும் கெடுப்பது அறியாமையாகும்.

தி.மு.க. செய்த மிகப் பெரியதவறு, அண்ணா செய்தது- திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கை நெகிழவிட்டது. ஆட்சியில் அமர்வது குறிக்கோள் அன்று. தமிழக விடுதலைதான் குறிக்கோள் என்று அது விடாப்பிடியாக இருந்திருந்தால் இன்று நாம் ஒரு வேலை உரிமை பெற்றிருக்க முடியும். ஆட்சியில் அமர்ந்ததுதான் அது செய்த மிகப் பெரிய பிழை. இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. பெரியார் அரும்பாடுபட்டு விதைத்த விதை செடியாகிக் காய்த்துக் கனியாகிப் பயன்படப் போகையில் எதிரியின் தாக்குதலுக்கு ஆளாகிவிட்டது. தமிழினம் முன்னேற முடியாமைக்கும் அடிமைத்தனத்திற்கும் முதாமையான காரணியம் அதன் பண்பாடே. மாந்தவியல் உயர்ந்த பண்பாட்டைக் கொண்டுள்ளதனால்தான் நமக்குத் தீங்கிழைத்தார்க்கும் நாம் நன்மையே செய்கின்றோம். அது நம்மை எந்த அளவிற்குப் புதைக்கின்றது என்பதைத் தமிழினம் அறிந்து கொள்ளவில்லை. தமிழீழத்தில் துமுக்கியைத் தூக்கித்திரியும் அதே தமிழினம் இங்கோ அருவருக்கத்தக்க இதழ்களைத் தூக்கித் திரிகின்றது. அங்கோ சிறைச் சாலைகள் நிரம்பி வழிகின்றது. இங்கோ திரை அரங்குகள் நிரம்பி வழிகின்றன. மக்களை மடையராக்கு என்னும் ஒரு மருட்சியில் வைத்திருப்பதையே இன்றுள்ள ஆட்சியர் நோக்காகக் கொண்டுள்ளனர். இவர்களை இந்த சாதி, சமய, திரைப்படக் கீழ்மைகளில் இருந்து மீட்டெடுத்தால் அன்றி நாம் தமிழக விடுதலையை முன் வைத்தல் இயலாது.

இந்த நிலையில்தான் ஒரு பற்றுக்கோடாக நமக்குத் தமிழீழப் போராட்டம் கிடைத்துள்ளது. எப்படியோ அது நமக்குக் கிடைக்கப்போவது உறுதி. அதற்குத்தான் உணர்ச்சியுள்ள உயிருள்ள இயக்கமாகிய தி.மு.க. போராடத் தொடங்கியுள்ளது. அது எப்படி என்பதை நாம் பார்ப்போம். தமிழர்களுக்கென்று குரல் கொடுக்க இன்று வலிமை வாய்ந்த இயக்கம் தி.மு.க தான். அதை யாரும் ஒப்புக் கொள்வர். ஆனால் நீங்களோ சேற்றை அதன் மீது வாரி இறைக்கின்றீர்கள். அன்புகனிந்து உங்கள் கடுமையைக் குறைத்துக் கொள்ளுங்கள். பயனுள்ள போராட்டங்களுக்குத் துணை நில்லுங்கள். தூற்றுதீர்கள். மிகினும் குறையினும் நோய் செய்யும் என்பது தாங்கள் அறியாத ஒன்றன்று. எனவே இனிவரும் காலங்களிலாவது கலைஞரைத் தூற்றுவதை விடுத்து வேற்றுமையை மறந்து பின்னின்று போராட அணியமாகுங்கள். இல்லாவிட்டால் ஒன்றும் தூற்றாது அமைதியாய் இருங்கள். அதுவே போதுமானது.

- அருண்மொழியன், தங்கச்சிமடம்

(மூன்றும் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். மொழியில்லாமல் ஓர் இனம் அமைய முடியாது. எனவே, மொழி ஒரு கட்டுக்கோப்பான நிலையில் இருந்தால்தான், இனமும் ஒரு கட்டமைப்பாக இருக்கவும், இயங்கவும் முடியும்? மொழி சிதையும் பொழுது இனம் சிதையும், மொழி கலப்புறும் பொழுது இனமும் கலப்புறும். மொழி குறுகும் பொழுது இனமும் குறுகும். அப்படித்தானே, ஒரு காலத்தில், இந்தியா முழுவதும் பரவியிருந்த தமிழினம், அதற்கடிப்படையான தாய்மொழியாகிய தமிழ் சிதைந்தபொழுது, சிதைவுற்று, அது கலப்புற்ற பொழுது தானும் கலப்புற்று, அது சிறுமையாகக் குறுகிய பொழுது, தானும் குறுகிவிட்டது. இன்று மலையாளிகள் என்பாரும், கன்னடர், தெலுங்கர் துளுவர், மராட்டியர் என்பாரெல்லாரும் யார்? ஒருகாலத்தில் தமிழர்களாக இருந்தவர்கள்தாமே! அவர்கள் எல்லாரும் பிரிந்துபோனது, அல்லது வேறினப்பட்டுப் பிரிந்தது எப்பொழுது? அனைவர்க்கும் தாய்மொழியாக இருந்த தமிழ் சிதைவுற்றுக் கலப்பெய்திய பின்னரன்றோ, அவ்வாறு நேர்ந்தது. இல்லையானால், இன்றைக்கு அவர்கள் வேறு, நாம் வேறு என்று ஆகியிருக்க முடியுமா? எண்ணிப்பாருங்கள். (தொடரும்)

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 64] பதிவு எண் TN/MS (C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

தூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்